**STARTING TIME 11.11 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 121/2019**

Deposition of **D.W.3** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assisatant of this court, on 13.03.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **சசிகலா** Father's Name :

Address :

Calling : Age :

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

8. 20.06.1973 அன்று எனது தகப்பனாரும், எனது பெரியப்பாவும் எழுதிக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது தகப்பனாரின் பெயர் தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி என்று உள்ளதா என்றால், இல்லை. எனது தகப்பனாரின் பெயர் தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி என்பது உண்மை என்றால், அந்த 2 பெயரையும் அந்த பத்திரத்தில் அதுபோல் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும், நான் சொல்வது போல் என் தகப்பனாருக்கு 2 பெயர்கள் என்று இல்லாததால் தான் அதுபோல் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல.

9. எனது தகப்பனார் 1983 ம் ஆண்டு மனநலம் சரியில்லாமல் சிகிச்சை பெற்று வந்தார் என்று சொல்லி உள்ளதால், அந்த சிகிச்சை சம்மந்தப்பட்ட ஆவணங்களிலும் எனது தகப்பனாரின் பெயர் தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி

என்று உள்ளதா என்றால், இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எந்த மருத்துவ ஆவணங்களிலும், எனது தகப்பனாரின் பெயர் தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி என்று உள்ளதா என்றால், இல்லை.

10. நான் தற்போது குடியிருக்கும் வீட்டில் எத்தனை வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால், நான் பிறந்தது முதலே அங்கு தான் வசித்து வருகிறேன். என் உடன் பிறந்தவர்கள் பெயர் என்னவென்றால், அக்கா ஷீலா, தங்கைகள் ஜெயந்தி, பாரதி, தம்பி சண்முக சுந்தரம் ஆகும். எனது தம்பி என்னுடன் தான் வசித்து வருகிறாரா என்றால், இல்லை, 15, 20 வருடங்களாக அவர் தனியாக வசித்து வருகிறார். நான் வசித்து வரும் அதே தெருவில் தனியாக வசித்து வருகிறாரா என்றால், இல்லை, முதலில் ஐதராபாத்திலும் தற்போது, சென்னையிலும் வசித்து வருகிறார்.

11. நான் வசிக்கும் வீட்டிலிருந்து 10, 15 வீடுகள் தள்ளிதான் பிரதிவாதி முனிசாமி வசித்து வருகிறார் என்றால், சரிதான். மனநலம் சரியில்லாமல் சிகிச்சை பெற்று வந்த எனது தகப்பனார் எந்த தேதியல் பூரண குணம் அடைந்தார் என்றால், தேதி நினைவில்லை ஆனால், 2016 ம் ஆண்டு பூரண குணம் அடைந்தார். எதன் அடிப்படையில் எனது தகப்பனார் பூரண குணம் அடைந்தார் என்று சொல்கிறேன் என்றால், அவர் சிகிச்சை பெற்று வந்த மருத்துவமனையிலிருந்து பரிசோதனைக்காக செங்கல்பட்டில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பிய போது, அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் எனது தகப்பனாருக்கு மனநலம் பாதிப்பு இல்லை என்றும், நீரிழிவு நோய்க்கு மட்டும் மாத்திரை எடுத்துக் கொண்டால் போதுமானது என்றார்.

12. எந்த மருத்துவமனையிலிருந்து செங்கல்பட்டு மருத்துவமனைக்கு என் தகப்பனாரை அனுப்பினார்கள் என்றால், காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு

அனுப்பினார்கள். அப்போது நானும் உடன் சென்றேனா என்றால், சென்றேன். என் தகப்பனாரை எழுத்து மூலமாக செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பினார்களா அல்லது வாய்மொழி மூலமாக அனுப்பினார்களா என்றால், வாய்மொழி மூலமாக தான் அனுப்பினார்கள்.

13. செங்கல்பட்டு மருத்துவமனையில் என் தகப்பனார் பூரண குணம் அடைந்தார் என எழுத்து மூலமாக எழுதி கொடுத்தார்களா என்றால், இல்லை, வாய்மொழி மூலமாக தான் சொன்னார்கள். 1983ம் ஆண்டிலிருந்து 2016ம் ஆண்டு வரை மனநல சிகிச்சை பெற்று வந்த என் தகப்பனார், மருத்துவ ஆவணம் இன்றி பூரண குணம் அடைந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

14. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4ல் சர்வே எண் 13/1ல் உள்ள சொத்து என் தகப்பனார் எழுதி வைத்ததாக சொல்லி உள்ளேன் என்றால், சரிதான், பின்னிட்டு அந்த சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டது. என்ன சர்வே எண்ணில் அதுபோல் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால், 81, 82/1, 82/2 ஆகிய 3 சர்வே எண்களில் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்படி 3 சர்வே எண்களில் உள்ள உட்பிரிவை வருவாய் துறையினர் தான் செய்துள்ளார்கள் என்றால், போலியான பத்திரத்தை வைத்துக்கொண்டு எனது பாட்டியை, பிரதிவாதிகளின் பாட்டி என்று சொல்லி அதுபோல் உட்பிரிவு செய்துள்ளார்கள்.

15. மேற்படி 3 சர்வே எண்களில் உட்பிரிவு செய்த விவரம் எப்போது தெரிய வந்தது என்றால், வட்டாட்சியர் அலுவலகம் சென்ற போது அதுபோல் உட்பிரிவு செய்த விவரத்தை வட்டாட்சியர் தான் எங்களுக்கு சொன்னார். வருவாய் துறை ஆவணங்களிலிருந்து எனது பாட்டி பெயரை எடுத்துவிடுமாறு எனக்கு தெரிந்தவர்கள் சொன்னார்கள்.

16. டவுன் சர்வே எண் 82/1, 82/2 ல் உள்ள சொத்துக்கள் யார் பெயரில்

உள்ளது என்று தெரியுமா என்றால், 82/1 உள்ள சொத்து அங்கம்மாள் பெயரிலும், 82/2ல் உள்ள சொத்து 2–ம் பிரதிவாதியான முனிசாமி மனைவி இசைவாணி பெயரில் உள்ளது.

17. சர்வே எண் 82/1 மற்றும் 82/2ல் உள்ள சொத்துக்கள் பழைய சர்வே எண் 13/1லிருந்து பிரிந்து புதிய எண்கள் கொடுக்கப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எனது தகப்பனார் பெயரில் இருந்த 13/1ல் இருந்த சொத்தானது நகர புல எண்கள் 82/1 மற்றும் 82/2ல் தவறாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து வருவாய் துறை அலுவலர்களிடம் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால், வட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் புகார் கொடுத்தேன். அந்த புகாரை இவ்வழக்குக்கு முன்பு கொடுத்தேனா அல்லது பின்பு கொடுத்தேனா என்றால், வழக்கிற்கு பின்பு தான் கொடுத்தேன்.

18. அவ்வாறு வருவாய் துறை அலுவலர்களிடம் கொடுத்ததாக சொல்லும் புகாரின் பேரில் நடவடிக்கை எதுவும் எடுத்து வருவாய் துறை அலுவலர்கள் எனக்கு அறிக்கை எதுவும் கொடுத்தார்களா என்றால், இல்லை. 14.06.2017 தேதியில் அரசாத்தம்மன் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்ற போது அங்கு போன சமயத்தில் எனது பாட்டியின் வீட்டிலிருந்த பெட்டியை திறந்தபோது தான் தாவா சொத்தின் விவரம் தெரிய வந்தது என்று சொல்வதால், அதற்கு முன்பு அந்த கோயிலுக்கு போயிருக்கிறேனா என்றால், இல்லை.

19. நான் சொல்லும் அரசாத்தம்மன் கோயிலானது, நான் குடியிருக்கும் வீட்டிலிருந்து சுமார் 100 அடி தூரத்திலேயே உள்ளது என்றால், சரிதான். பிரதிவாதி முனிசாமியின் வீடானது மேற்படி கோயிலிலிருந்து 2 வீடுகள் தள்ளி உள்ளது என்றால், சரிதான். அந்த இடத்தில் அரசாத்தம்மன் கோயில் மற்றும் படவேட்டம்மன் கோயில் என 2 கோயில்கள் உள்ளது என்றால், சரிதான்.

பிரதிவாதியின் வீடானது படவேட்டம்மன் கோயில் எதிரே உள்ளது என்றால், சரிதான்.

20. என் பாட்டிக்கு சொந்தம் என சொல்லும் பழைய சர்வே எண் 13/1ல் உள்ள சொத்தானது அரசாத்தம்மன் கோயில் எதிரே உள்ளது என்றால், சரிதான், அந்த சொத்தானது அரசாத்தம்மன் கோயில் எதிரே ஆரம்பித்து படவேட்டம்மன் கோயில் வரை சென்று முடிகிறது, அந்த சொத்தில் பாதி சொத்திற்காகதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு எனில் தாவா சொத்து அரசாத்தம்மன் கோயில் எதிரே உள்ளதா அல்லது படவேட்டம்மன் கோயிலுக்கு எதிரே உள்ளதா என்றால், படவேட்டம்மன் கோயிலுக்கு எதிரேதான் உள்ளது.

21. 1973ம் ஆண்டு எனது பாட்டி எழுதி வைத்திருந்த உயில் சாசனத்திலோ அல்லது அதே வருடம் எனது தகப்பனாரும், அவரது சகோதரரும் எழுதி கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்திலோ இவ்வழக்கு சொத்தானது படவேட்டம்மன் கோயில் எதிரே இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், படவேட்டம்மன் கோயிலே சிறியதாக தான் உள்ளது, அதுவும் எங்களுக்கு சொந்தமான இடத்தில் தான் உள்ளது, அதனால் அந்த இடத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை, அரசாத்தம்மன் கோயில் இருப்பதாக தான் சொல்லப்பட்டுள்ளது. எனவே, அந்த ஆவணங்களில் படவேட்டம்மன்கோயிலை ஒரு செக்பந்தியாக சொல்லவில்லை என்றால், சரிதான்.

22. கும்பாபிஷேகம் நடத்தியதாக சொல்வது எந்த கோயிலுக்கு என்றால், 2 கோயில்களுக்கும் செய்தோம். நான் சொல்வது தவறு என்றும், எனது பாட்டி கட்டிய கோயில் என்று சொல்வது உண்மை என்றால், அதை அவ்வப்போது சென்று வழிபாடு செய்திருப்போம் என்றும், எங்களுக்கும் அந்த கோயிலுக்கும் சம்மந்தம் இல்லை என்பதால்தான், 2017 ஆம் ஆண்டு தான் அந்த கோயிலுக்கு சென்றோம் என்றால், சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 2

கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் நடந்ததாக சொல்லவில்லை என்றால், சரிதான், பெரிய கோயில் என்பதால், அரசாத்தம்மன் கோயிலை மட்டும் சொன்னேன்.

23. எனது தாயாரின் கையெழுத்து எனக்கு அடையாளம் தெரியுமா என்றால், தெரியும். என்னிடத்தில் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது தாயாரின் கையெழுத்தா என்றால், சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு இல்லை என்று சொல்கிறார்.

24. எனது தகப்பனார் எழுதி வைத்ததாக சொல்லும் உயில் பத்திரம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால், அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுதப்பட்டது. அப்போது யார், யார் உடன் இருந்தார்கள் என்றால், எனது அம்மா ராஜேஸ்வரி, அக்கா ஷீலா, தங்கை பாரதி மற்றும் நானும் உடன் இருந்தார்கள்.

25. சர்வே எண் 13/1ல் உள்ள சொத்தானது புதிய சர்வே எண்கள் 82/1 மற்றும் 82/2 என மாற்றப்பட்டது என்ற விவரம் உயில் எழுதுவதற்கு முன்பு தெரிந்ததா அல்லது பின்பு தெரிந்ததா என்றால், உயில் எழுதுவதற்கு முன்பு தெரிந்தது என்று சாட்சி கூறிவிட்டு பின்னர் உயில் எழுதிய பிறகு தான் தெரிந்தது என்று கூறுகிறார்.

26. எனது தகப்பனார் எழுதியதாக சொல்லும் வா.சா.ஆ–11 உயில் சாசனத்தில் சர்வே எண் என்னவென்று சொல்லப்பட்டுள்ளது என்றால், சர்வே எண் 13/1, நகர புல எண் 82 பகுதி, 71 பகுதி, 72 பகுதி என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். உயில் சாசனத்தில உள்ள சொத்தின் புதிய சர்வே எண் 82/1 அல்லது 82/2 என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். எனவே, வா.சா.ஆ–11 உயில் சாசனத்தில் உள்ள சொத்திற்கும், பிரதிவாதியின் சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால், சரியல்ல.

27. உயிலில் உள்ள சொத்துதான் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ள சொத்து என்று சொல்கிறேனா என்றால், சரிதான். எனது வாக்குமூலத்தில் எங்காவது

பழைய சர்வே எண் 13/1ல் உள்ள சொத்துதான் புதிய சர்வே எண் 82/1 மற்றும் 82/2ல் உள்ள சொத்து என்று சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

28. எனது தகப்பனார் உயிலை முதலில் எழுதினாரா அல்லது பொதுஅதிகார பத்திரத்தை முதலில் எழுதினாரா என்றால், உயிலை 07.09.2017 அன்று எழுதினார், பொதுஅதிகார பத்திரத்தை 08.09.2017 அன்று எழுதினார். அந்த 2 ஆவணங்களிலும் நான் சாட்சியாக கையெழுத்து எதுவும் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். அந்த 2 ஆவணங்களை எழுதிய போதும் எங்கள் குடும்பத்தினரை தவிர மூன்றாவது நபர்கள் யாரும் உடன் இருந்தார்களா என்றால், இல்லை.

29. வா.சா.ஆ–11 உயிலில் எனது தகப்பனாரின் பெயர் தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி என்பதற்காக ஆவணம் எதுவும் இணைக்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை, ஆனால் பெயர் அதுபோல் எழுதப்பட்டுள்ளது. உயிலை யார் எழுதியது என்றால், நரசிம்மன் என்பவர் எழுதினார். பொதுஅதிகார பத்திரத்தையும் அவர்தான் எழுதினாரா என்றால், ஆமாம். நான் சொல்வது போல் எனது தகப்பனாரின் பெயர் தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி என்பதற்காக ஆவணம் எதுவும் இல்லாமல் பொய்யாக ஆவணங்களை உருவாக்கி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல, அதுபோல் எனது தகப்பனாருக்கு 2 பெயர்கள் இருப்பதாக வட்டாட்சியர் சான்று வழங்கியுள்ளார்.

30. பழைய சர்வே எண் 13/1 ல் உள்ள சொத்து நஞ்சையா அல்லது புஞ்சையா அல்லது நத்தமா என்று தெரியுமா என்றால், அது புஞ்சையாகும். படவேட்டம்மன் கோயிலில் கிணறு ஒன்று உள்ளது என்றால், சரிதான். தாவா சொத்து விவரத்தில் செக்பந்தியில் கிணறு இருப்பதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை. தாவா சொத்திற்கும், பிரதிவாதிகளுக்கு சொந்தமான 82/2ல் உள்ள சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல. எனவே, வா.சா.ஆ–11 உயிலும்,

வா.சா.ஆ–12 பொது அதிகார பத்திரத்தின் பெயரில் தாவா சொத்தில் எந்த உரிமையும் கேட்க இயலாது என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கபட்டது.

**ENDING TIME 12.14. P.M.**

G YUVARAJ

Digitally signed by G YUVARAJ
Date: 2025.03.13 17:20:31 +0530